[2002 ஏப்ரல் 12

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கேள்விகளுக்கு, இங்கே விநியோகிக்கின்ற நிலையங்களிலேயிருந்து, வாகனங்கள் பயன்படுத்துவோரிடமிருந்து மாதிரிகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், உணவுப் பொருள் வழங்கு வாரியம், நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலமாகவும் எடுக்கப்பட்டு, இந்தியத் தொழில்நுட்பக் கழகம், சென்னை மூலமாக எரிபொருள் தரம் மற்றும் கலப்படம் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இதற்குப் பல்வேறு அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். அவற்றிற்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 136, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

136—

மிகவும் பிற்படுத்தப்பட்டோர்

*__18624__—திரு. **கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழும் செக்காளர் சமுதாயத்தினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்து, கிளைக் கழகச் செயலாளராகவும், ஒன்றியக் கழகச் செயலாளராகவும் இருந்த என்னை தாயுள்ளம் கொண்ட இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் ஆக்கி, மேலும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2002 ஏப்ரல் 12]

நம்பிக்கையுடன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சராகவும் அமர்த்தி, தாயுள்ளத்துடன், எங்கள் நேரத்தை வீணாக்காமல் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும்; நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள். எங்கள் அம்மா அவர்களின் நம்பிக்கை வீணாகாமல் நடந்து கொள்வேன் என்று இந்த மாமன்றத்திற்கு உறுதியளிக்கிறேன். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் 15-3-1993-ல் ஓய்வு பெற்ற நீதிபதி, நீதியரசர் திரு. கே. சண்முகம் அவர்கள் தலைமையில் ஏற்படுத்தப்பட்டது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விடை—(அ) மற்றும் (ஆ) செக்காளர் வகுப்பினை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கை குறித்து ஆய்வு செய்து, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலஆணையம் அளித்துள்ள அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் பிரச்சினைகளை இம்மாமன்றத்தில் எடுத்துக்கூற, சாதாரணத் தொண்டனாகிய எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கல் செக்கில் எண்ணெய் அரைத்து, வணிகர்களிடம் விற்பனை செய்து வாழ்க்கை நடத்தும் மிகப் பின்தங்கிய இடத்திலே வாழ்ந்து வருகின்றவர்கள் செக்காளர் சமுதாயத்தினர் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரணியல், வழுக்கலம்பாடு, பத்மநாபபுரம், அழகியபாண்டிபுரம், இடைக்கோடு, திருவிதாங்கோடு, காட்டுக்கடை, தோவாளை, குலசேகரம், கொல்லங்கோடு, காஞ்சாம்புறம், புதுக்கடை, அருமனை, குளச்சல், பளுகல் என்று பல்வேறு பகுதிகளில் சுமார் 1-1/2 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசித்து வருகிறார்கள். தற்போது, இயந்திரங்களைப் பயன்படுத்தி தேங்காய், புன்னைக்காய், வேப்பங்காய், எள் போன்ற எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுப்பதால் இவர்களது தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு வாழ்க்கைக்கு வழியின்றி அவர்கள் வறுமையோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் குழந்தைகள் படிப்பதற்கு அரசு சலுகைகள் கிடைக்கவும், அரசு வேலைகளில் முன்னுரிமை கிடைக்கவும் இவர்களைச் சமுதாயத்தில் முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்லவும், மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு கருணை உள்ளம் கொண்டு, செக்காளர் சமுதாய மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க நடப்பாண்டிலாவது முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இதைப் பரிசீலனையில் எடுத்துக்கொள்ளும் என்று இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி எஸ். ராஜம்மாள்.

திருமதி எஸ். ராஜம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் அம்மா அவர்களை வணங்கி எனது கேள்வியினைத் தொடங்குகிறேன். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் எதனை அளவுகோலாகக் கொண்டு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பரிந்துரைத்துள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தால், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க, சமூக ரீதியான பிற்படுத்தப்பட்ட நிலை, கல்வி ரீதியான பிற்படுத்தப்பட்ட நிலை மற்றும் பொருளாதார ரீதியான பிற்படுத்தப்பட்ட நிலை ஆகிய அளவுகோல்களின்படி பரிந்துரைக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 137, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.